


**விமான நிலையங்கள் மற்றும் விமான சேவைகள் (ஸ்ரீ லங்கா) (தனியார்) நிறுவனம்**

மக்களை முன்னேற்றுவதன் மூலம் நாம் வர்த்தகத்தை முன்னேற்றுகின்றோம்

**AASL என்பது அதிமிகுந்த தேர்ச்சியாளர்களைப் பணியமர்த்தி சமமான சந்தர்ப்பத்தைத் தொழில் முயற்சியாளருக்கு வழங்கும் நிறுவனமாகும்.**

**விமான நிலையங்கள் மற்றும் விமான சேவைகள் (ஸ்ரீ லங்கா) (தனியார்) நிறுவனம் (AASL) சீரான எண்ணங்களைக் கொண்ட அதியுன்னத வழிநடத்தலுடனான ஆட்களைக் கொண்டு பின்வரும் பதவி வெற்றிடங்களுக்கான ஆட்சேர்பை மேற்கொள்ள எண்ணியுள்ளது**

**(யாழ்ப்பாண சர்வதேச விமான நிலையமும் (JIA) கொழும்பு சர்வதேச விமான நிலையமும் (CIAR))**

## விமான தொழினுட்பவியலாளர்

**பதவி அமைவு:** விமானசேவை நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பொறியியலாளர் / AME என்பவரது அறிவுறுத்தல்களுக்கமைய விமான ஓடுபாதைகளை நெறிப்படுத்தி வாடிக்கையாளர்களான விமான நிறுவனங்களுக்கான அடிப்படைத் தொழினுட்ப உதவிகளை விமான நிலையங்கள் மற்றும் விமான சேவைகள் (ஸ்ரீ லங்கா) (தனியார்) நிறுவனத்தின் விதிமுறைகள் மற்றும் நியமங்களுக்கமைய வழங்கித் தரப்பட்ட பராமரிப்பு மற்றும் திருத்தங்களைப் பொருத்தமான பராமரிப்பு விதிமுறைகளுக்கமைய பாதுகாப்புடனும் தகவுத் திறனுடனும் மேற்கொள்வதாகும். தரை கையாள்வு அதிகாரி – சாய்தள இயக்கங்கள் அதிகாரியின் கீழ் பணியாற்றுதல்.

**பிரதான பொறுப்புகள்:**

i. விமானத்தின் விமானிக்கெனப் பாதுகாப்பாக திருப்பவும், நிறுத்தவும், இயந்திர இயக்கத்தை நிறுத்தவும் உதவும் வகையில் பொருத்தமான நுணுக்கமாகச் செயற்பட்டு விமான ஓடுபாதையைப் பராமரித்தல்.

ii. பாதுகாப்பான செயற்பாட்டுச் சூழலை உறுதிப்படுத்தும் வகையில் விமானங்களது ஒவ்வொரு வருகைக்கு முன்னரும் வெளிநாட்டுச் சிதைவுப் பொருட்களை (FOD) மேற்பார்வை செய்து கையாளுதல்.

iii. விமான சேவை நிறுவனங்களது வழிகாட்டல்களுக்கும், நிறுவனத்தின் விதிமுறைகளுக்கும் அமையக் குறித்த நேரத்துக்குள் விமான சேவைகளை மேற்கொள்வதற்குரிய வகையில் விமானத்துக்கான எரிபொருளைச் சரியாக மீள்நிரப்பு செய்தல்.

iv. புராமரிப்பு மற்றும் இயக்கச் செயற்பாடுகளை இடைத் தலையீடுகள் இல்லாதுப் பாதுகாப்பாகவும் தகவுத் திறனுடனும் தொடர்பாடல் கருவிகளது உதவியுடன் ஒன்றிணைப்பு செய்தல்.

v. விமானப் பறப்புக்கு முன்னரும் அதன் பின்னருமான பின்வரும் மேற்பார்வைகளை குறித்துரைக்கப்பட்டுள்ள விதிமுறைகள் மற்றும் ஒழுங்குக்கு ஏற்ற வகையில் மேற்கொள்ளல். – கட்டுப்பாட்டு நிலைகள், திரவ நிலை, டயர்கள், தடுப்புகள் மற்றும் ஏனைய விமானத் துணை உறுப்புகள்.

vi. விமானி மற்றும் பயணிகள் விமான சேவை நிறுவனத்தின் தரைப் பொறியியலாளரது மேற்பார்வையின் கீழ் விமானத்தின் சிக்கல்களை இனங்கண்டு அவற்றின் தொழினுட்பக் குறைகளைத் தீர்த்தல், இயந்திரங்கள், எவியொனிக்ஸ் மற்றும் ஏனையவற்றின் பராமரிப்பு அல்லது பதிலீடு, குறைபாடு என்பவற்றைப் பரீட்சித்தல், மேற்பார்வை செய்தல்.

vii. பாதுகாப்புக் கருவிகள் பயன்பாடு உள்ளிட்ட விமானம், விமானி மற்றும் பயணிகளது தனிப்பட்ட பாதுகாப்பு, மின்சாரப் பாதுகாப்பு என்பவற்றின் மீதான அங்கீகனரிக்கப்பட்ட விதிமுறைகைளைக் கையாளுதல்.

viii. இனங்காணப்பட்ட திருத்தங்கள் மற்றும் விமானம் பறப்பதற்கான தயாரிநிலை என்பவற்றை இற்றைப்படுத்தித் தனியாட்கள், விமானம் இயக்குவோர், அலுவலர்கள் என்போரிடையே உடனடித் தொடர்புகளை மேற்கொள்வதற்கான தொடர்பாடல் கருவிகளைப் பயன்படுத்துதல்.

ix. விமானத்தின் பாதுகாப்பான பறப்புக்கும் செயற்பாட்டுக்குமான பராமரிப்பு மற்றும் பாதுகாப்புக்குமான தயார்நிலையை உறுதிப்படுத்திக்கொள்ளல்.

x. மேற்பார்வை தரத்தில் உள்ள அலுவலர்கள் வழங்கும் மேலதிகக் கடமைகளைச் செயற்பாட்டுக்குத் தேவையான வகையில் மேற்கொள்ளல்.

1. **தகைமைகள்** : i. க.பொ.த. (சாதாரண தரப்) பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல்

மற்றும்

ii. இவை தொடர்பான விமானத் தொழினுட்பப் பயிற்சி நிறுவனமொன்றில் தொழில்சார் தகைமைகளைப் பெற்றிருத்தல்,

2. **அனுபவம்:** i. உரிய துறையில் குறைந்தது இரண்டு (02) வருடகால அனுபவம் பெற்றிருத்தல்.

வர்த்தக நிலையிலான விமானப் போக்குவரத்து நிறுவனத்தில் பணியாற்றிய அனுபவம் பெற்றுள்ள விண்ணப்பதாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

3. **வயது:** விண்ணப்பிக்கும் இறுதித் திகதியன்று 435 வயதுக்குக் குறைவாக இருத்தல் வேண்டும்.

4. **சம்பளம்**: தெரிவுசெய்யப்படுவேர் கவர்ச்சிகரமானன சம்பளத்தைப் பெறுவர். இதற்கு மேலதிகமாக கவர்ச்சிகரமான ஊக்கக் கொடுப்பனவையும் பெறுவர்.

5. **தெரிவு செய்யப்படும் முறை**: நேர்முகத் தேர்வின் மூலம்.

**பொது விடயங்கள்:**

தெரிவுசெய்யப்படுவோர் தீவில் அமைந்துள்ள கம்பெனிகுச் சொந்தமான எந்தவொரு அமைவிடத்திலும் பணியாற்றுதல் வேண்டும் என்பதுடன் தேவையேற்படின் JIR மற்றும் CIAR ஆகிய பணியிடங்களிலும் சேவையாற்றுதல் வேண்டும்.

குறித்த தகைமைகளையும் அனுபவத்தையும் நீங்கள் கொண்டிந்தால் தயவு செய்து உங்களது விபரங்களை **hhtp://www.airport.lk<Corporate<Careers** என்ற எமது இணைய தளத்தில் வழங்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பத்துக்கமையக் குறித்த சான்றிதழ்களது பிரதிகளுடன் பின்வரும் முகவரிக்கு **2026 ஓகஸ்ட் 25 ஆம் திகதிக்கு** முன்னர் பதிவுத் தபாலில் அல்லது குரியர் சேவை மூலம் அனுப்பி வைக்கவும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியைத் தயவு செய்து குறிப்பிடவும்.

குறித்த சான்றிதழ்களது பிரதிகளுடன் விண்ணப்பிக்காத விண்ணப்பங்கள் அல்லது வேறு முறையில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் அல்லது இணைதளத்தில் வழங்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பத்துக்கு மாறான விண்ணப்பங்கள் இறுதித் திகதிக்குப் பின்னர் இந்த அலுவலகத்தில் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் என்பன நிராகரிக்கப்படும்.

தெரிவு செய்யப்படும் ஒவ்வொரு கட்டத்தின்போதும் தகுதியான விண்ணப்பதாரிகளுக்கு மட்டுமே அறிவித்தல் விடுக்கப்படும என்பதைத் தயவு செய்து கவனிக்கவும்.

இந்த அறிவித்தலில் சிங்களம் ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழிபெயர்ப்புகளில் விடயங்கள் பற்றிய தெளிவின்மை ஏற்பட்டால் ஆங்கில அறிவித்தலே மேலோங்கி நிற்கும் என்பதைத் தயவுடன் கவனிக்கவும்.

**தலைவர்**
**விமான நிலையங்கள் மற்றும் விமான சேவைகள் (ஸ்ரீ லங்கா) (தனியார்) நிறுவனம்**
**பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம்**
**கட்டுநாயக்க**

16/08/2026